வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 02 திங்கட்கிழமை (18 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 232

# மனித உரிமைகள் குறித்து சகல கட்சிகளினதும் நிலைப்பாட்டை கோருகின்றது மன்னிப்புச் சபை

## தேர்தலின் முன்வெளிப்படுத்த கடிதம் மூலம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 18

மனித உரிமைகள் குறித்து தங்கள் நிலைப்பாடுகளை எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று ஸ்ரீலங்காவில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் லண்டனில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியிருக்கிறது.

அனைத்து முக்கிய அரசியல் கட்சிகளுக்கும் மன்னிப்புச் சபை எழுதியுள்ள பகிரங்கக் கடிதத்தில் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான உறுதிமொழியை சகல கட்சிகளும் பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (உ-எ-6)

### முச்சந்தி முனி



அப்ப...... பிரசாரப் பீரங்கிகள் முழங்கத் தொடங்கப் போகுது எண்டு சொல்லுங்கோ......!

### தாயக வீட்டைப் பார்க்க
## தெல்லிப்பழைப் பகுதிக்கு சென்றவரைக் காணவில்லை

நேற்று முன்தினம் தெல்லிப்பழைப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழையில் இருந்து இடம் பெயர்ந்து கோண்டாவில் ரயில் நிலைய வீதியில் வசித்து வந்த 71 வயதான ஆறுமுகம் ஐயாத்துரை என்பவரையே காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் தம்முடன் கொண்டு சென்ற சைக்கிளும், மையும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பகுதிக்கு அண்மையில் — தெல்லிப்பழை உதவி அரச அதிபர் அலுவலகத்தில் இருந்து தெற்கே 200 யார் தொலைவில் உள்ள வைரவர் கோவிலுக்கு எதிராக உள்ள ஒழுங்கையில் — இருந்து அவரது பிள்ளைகளால் மீட்கப்பட்டன.

இராணுவத்தினர் இவரைப் பிடித்துச் சென்றிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

காணாமற் போன ஆறுமுகம் ஐயாத்துரை மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். இவர் அடிக்கடி தமது வீட்டுக்குச் சென்று, விறகு மற்றும் பொருள்களை அங்கிருந்து எடுத்து வருவது வழக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## படையினரின் வேட்டுக்கு வளலாயில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வளலாய் பகுதியில் உள்ள தமது வீடுகளில் இருந்து பொருள்களை மீட்டுவர அங்கு சென்ற இருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

வளலாயில் இருந்து இடம் பெயர்ந்து நீர்வேலியில் வசித்து வந்த மார்கமுத்து குலேந்திரராசா (வயது 49), புத்தூர் மேற்கில் வசிக்கும் செல்லர் நாகேந்திரம் (வயது 42) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வளலாய் பகுதியில் உள்ள வீடுகளை கடந்த சில நாட்களாகப் படையினர் தகர்த்து வருவதை அடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தமது வீடுகளில் எஞ்சியுள்ள கதவு, ஜன்னல் போன்றவற்றை கழற்றி எடுத்து வருவதற்காக அப்பகுதிக்கு சென்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஜ-15)

## மீனவர் மீது படையினர் சூடு! ஒருவரைக் காணவில்லை
### அராலிக் கடலில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

அராலி கடற் பகுதியில் வள்ளம் ஒன்றில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மூவர் மீது நேற்று அதிகாலை 3-30 மணியளவில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் காயமடைந்தார். மற்றொருவர் கடலில் பாய்ந்து நீந்திக் கரைசேர்ந்தார். மூன்றாவது மீனவரையும் மீனவர்கள் சென்ற வள்ளத்தையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அராலிக் கடலில் அராலித்துறை — வேலணைப் பக்கமாக இவர்கள் மூவரும் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் மண்கும்பான் பகுதியில் இருந்து அவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் சாவற்காட்டைச் சேர்ந்த துரைச்சாமி சுதன் (வயது 16) என்ற மீனவரே காயமடைந்தார்.

இவருடன் கூடச் சென்ற

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் சுற்றுலா பஸ்ஸை நோக்கி புக்காரா தாக்கு!
### நாகர்கோவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடமராட்சிப் பகுதியில் சுற்றுலா சென்ற யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பஸ்ஸை நோக்கி 'புக்காரா' விமானம் 90 கலிபர் தாக்குதலை நடத்தியது.

நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் தமது சுற்றுலாவை நாகர்கோவிலுடன் முடித்துக் கொண்டு மாணவர்கள் புறப்பட்ட வேளை அவர்கள் வந்த பஸ்ஸை நோக்கி "புக்காரா" தாக்குதல் நடத்தியது.

இதனால் பீதியுற்ற மாணவர்கள் பஸ்ஸின் ஜன்னல்கள் மற்றும் கதவு ஊடாக குதித்து நாலாபுறமும் சிதறி பாதுகாப்புத் தேடி ஓடினர்.

பின்னர் 'புக்காரா' அப்பகுதியை சமார் மூன்று தடவைகள் வட்டமிட்டு பஸ்ஸை நோட்டமிட்ட பின் அங்கிருந்து அகன்றது.

'புக்காரா' தாக்குதலினால் பஸ்ஸிலோ அதில் பயணம் செய்த மாணவர்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தேர்தல்கால வன்செயல்கள் தணிந்ததாகத் தகவல்

கொழும்பு, ஜூலை 18

தேர்தலோடு தொடர்புடைய பெரும் வன்செயல்கள் எதுவும் நாட்டின் எந்த பகுதியில் இருந்தும் கடந்த நான்கு தினங்களில் கிடைக்கவில்லை என்று பொலீஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் சிறிய அசம்பாவிதங்கள் குறித்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், நாட்டின் நிலைமை அமைதியாகவே இருக்கிறதென்று பொலீஸ்மா அதிபர் பிராங் டி. சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பாதுகாப்பிற்கு பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபர் இக்னேஷியஸ் கருணாரத்தினம் தகவல் தருகையில் —

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டா சிலைக்கு முன் உறுதிமொழியுடன் எதிரணியின் பிரசாரம் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் அனைவரும் நேற்று ஹொரகொல்லையில் உள்ள காலஞ்சென்ற பிரதமரும் சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிலையின் முன் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

பின்னர் முன்னணியின் முதலாவது உத்தியோகபூர்வ தேர்தல் பிரசாரக்கூட்டம் நிட்டம்புவையில் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர்.

கூட்ட மேடையின் இரு பக்கங்களிலும் சு. கவின் பிரதித் தலைவரான சந்திரிகா குமாரணதுங்காவின் பெரிய படங்கள் இரண்டு வைக்கப்பட்டிருந்தன.

தேர்தல் பிரசாரத்தை நெறிப்படுத்தும் பொறுப்பு சந்திரிகாவிடம் பூரணமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை இது துல்லியமாக எடுத்துக் காட்டுவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

பெண்கள் அதிக எண்ணிக்கையில் கூட்டத்தில் காணப்பட்டனர்.

திருமதி சந்திரிகா கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திறங்கியபோது, கூடியிருந்த மக்கள் ஆரவாரத்துடன் அவருக்கு பெரிய வரவேற்பளித்தனர்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உபசபாநாயகராக இருந்தவரும் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டவருமான காமினி பொன்சேகாவும் கூட்டத்தில் பேசினார். (உ-எ-6)

- பத்து லட்சம் அணுக்குண்டுகளின் சக்தி பிறியது!
- ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்துக்கு பெரும் வெடிப்பு!!
- 2 ஆயிரம் கிலோ மீற்றர் விட்டத்தில் தீப்பிழம்பு!!!
- பூமியளவு பருமனில் மிகப் பெரும் ஆழத்துக்கு பள்ளம்!!!!

## வால் நட்சத்திரத்தின் முதல் துண்டின் மோதலிலேயே வியாழனில் அனர்த்தம்!
### அடுத்து மோத இருக்கும் 20 துண்டங்களும் இன்னும் பெரியவையாம்

வாஷிங்டன், ஜூலை 18

இருபத்தொரு துண்டுகளாகச் சிதறிய ஷூமேக்கர்—லெவி வால் நட்சத்திரத்தின் முதலாவது துண்டு நேற்று அதிகாலை 1-48 மணிக்கு வியாழன் கிரகத்துடன் மணித்தியாலத்துக்கு 2 லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் சென்று மோதியதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் ஆயிரம் கிலோ மீற்றர் உயரமான வெடிப்பு ஏற்பட்டதை பூமியில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இம்மோதலினால் இரண்டாயிரம் கிலோ மீற்றர் விட்டமுடைய பெரும் தீப்பிழம்பு எழுந்தது.

சுமார் ஒரு கிலோ மீற்றர் விட்டத்தைக் கொண்ட இந்த முதல் துண்டு மோதியதால் — பூமியைப் போல ஆயிரத்து 800 மடங்கு பருமனுடைய வியாழனில் பூமியளவு பருமனுடைய பெரும் பள்ளம் ஏற்பட்டது.

வால்வெள்ளியின் முதலாவது துண்டு நேற்று அதிகாலை மோதியபோது வெளிப்பட்ட சக்தி, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது வெடிக்க வைக்கப்பட்ட அணுகுண்டுகள் வெளிப்படுத்திய சக்தியிலும் பார்க்க பத்து லட்சம் மடங்கு அதிகமாக இருந்தது என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நாஸா விஞ்ஞானிகளை மேற்கோள் காட்டி பி பி ஸி. இத்தகவலை வெளியிட்டது.

நேற்றுக் காலை மோதிய வால்வெள்ளியின் முதலாவது துண்டு, வால்வெள்ளியின் ஏனைய இருபது துண்டுகளிலும் விட அவ்வளவு பெரியதல்ல என்றும் —

இந்த ஏனைய இருபது துண்டுகளும் ஆறு மணித்தியால இடைவெளியில் — எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை — தொடர்ந்து வியாழனுடன் மோதவிருக்கின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வியாழனின் வளிமண்டலத்தினுள் 30 கிலோ மீற்றருக்கு இவ் வால்வெள்ளித் துண்டு ஊடறுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்வெளியில் சஞ்சரித்து வரும் ஹபிள் விண்கலத்தில் உள்ள தொலைநோக்கி எடுத்த முதலாவது படங்களில் மோதலை காணக்கூடியதாக இருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இம் மோதலின்போது வியாழக்கிரகத்தில் ஏற்பட்ட இந்த வெடிப்பை ஸ்பெயின், சிலி மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் திரண்டிருந்த விஞ்ஞானிகள் சக்தி வாய்ந்த தொலைநோக்கிகளால் அவதானித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹபிள் விண்கலத்தின் தொலை நோக்கி மூலம் பெறப்பட்ட படங்களும் பின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## விண்வெளி மோதல் கண்டு விஞ்ஞானிகள் கும்மாளம்
### ஷம்பெய்ன் அருந்தி ஆரவாரம்

வாஷிங்டன், ஜூலை 18

சூரிய மண்டலத்தில் உள்ள மிகப் பெரிய கிரகமான வியாழனுடன் வால்வெள்ளியின் துண்டு ஒன்று மோதிய நிகழ்வை நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஷம்பெய்ன் அருந்திக் கொண்டாடினார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

விண்வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஹபிள் விண்கலம் அனுப்பிய படங்கள் நாஸா விண்வெளி நிலையத்துக்கு கிடைத்த போது, அங்கு கூடியிருந்த விஞ்ஞானிகள் மத்தியல் உற்சாகம் கரைபுரண்டோடியது... செய்து துள்ளிக் குதித்தனர் என்று பி. பி. ஸி. ... தது.

எத்தனையோ கோடி ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம் பெறும் இவ் விண்வெளி மோதலை தாங்கள் காணக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்று அவர்கள் மகிழ்ந்தனர்.

அப்போது நாஸா விண்நிலையத்தில் ஷூமேக்கர்-லெவி வால் வெள்ளியைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளில் ஒருவரான ஷூமேக்கரும் இருந்தார்.

நாஸா விஞ்ஞானிகள் நிர்ணயித்த நேரத்திற்கு இருபத்தெட்டு நிமிடங்கள் கழித்தே வால்வெள்ளியின் முதலாவது துண்டு ... என்று நாஸா வட்டாரங்கள் ...

### வால்நட்சத்திரம் மோதுவதை
## இந்திய விஞ்ஞானிகளினால் பார்க்க முடியாமல் போனது

புதுடில்லி, ஜூலை 18

ஆசியாவில் மிகச்சக்தி வாய்ந்த தொலை நோக்கி தமிழ்நாடு வடஆற்காடு மாவட்டம் காவலூரிலேயே பொருத்தப்பட்டுள்ள போதிலும் —

காலநிலை சீராக இல்லாத தன் காரணத்தால் இந்திய விஞ்ஞானிகளால் வியாழன் கிரகத்துடன் வால் வெள்ளியின் முதலாவது துண்டு மோதியதை அவதானிக்க முடியாமற் போயிற்று என்று அறிவிக்கப்படுகிறது.

வால்நட்சத்திரத்தின் இன்னொரு துண்டு நேற்று இரவு வியாழனுடன் மோத இருந்தது.

அந்த மோதலை காவலூர் ஆய்வு கூடத்தில் இருந்து தெளிவாகப் பார்க்க வாய்ப்பு இருந்ததாக இந்தியவிஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர். (உ-எ)

## வவுனியாவில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூலை, 18

வவுனியா பண்டாரிக் குளத்தின் அணைக்கட்டில் இளைஞர் ஒருவரின் சடலம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பாலமோட்டையைச் சேர்ந்த நடராசா ஞானதாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

திருகோணமலை பிறிமா ஆலையில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு 8 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு 'கோமாரி' கப்பல் இன்று காலை பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

யாழ் மாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்க கிளைகளில் ஒரு கிலோ மா 13 ரூபா என்ற அடிப்படையில் வேண்டிய தொகையை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 7,250 பரல் மண்ணெய் நாளை வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்டத்துக்கு ஜூலை மாதக்கோட்டாவான — 7 ஆயிரத்து 250 பரல் மண்ணெண்ணெயுடன் "மாஹோ" கப்பல் நாளை காலை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். செயலகத்துக்கு எடுத்து வரப்படும் இந்த மண்ணெண்ணெய் ஒரு ஆளுக்கு 4 லீற்றர் வீதம் பங்கீட்டு விதிபோல கிக்கப்படவுள்ளதாக தெரிய வந்தது. (உ-3)

## ஐ. நா. தூதரக அதிகாரி வருகை

தமிழகத்துக்கு அகதிகளாக சென்று மீளத்திரும்பும் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ளவர்களின் பிரச்சினைகள் குறித்து நேரடியாக ஆராய்வதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி திரு. டேவிட் இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

## துப்பாக்கி திருட்டு போனது

கொழும்பு மாநகரசபையில் அங்கம்வகிக்கும் ஐ. தே. க. உறுப்பினர் விமரதிவா பெர்னாண்டோ தமக்கு அரசு வழங்கிய ரிவோல்வர் களவாடப்பட்டு விட்டதாக பொலிஸில் முறையிட்டிருக்கிறார்.

தாம் தமது குடும்பத்தினருடன் வெளியே சென்றிருந்த போது திருடர்கள் வீட்டினுள் புகுந்து 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், ரிவோல்வரையும் களவாடிச் சென்றுவிட்டனர் என்று அவர் கொட்டாஞ்சேனை பொலிஸில் முறையிட்டிருக்கிறார்.

## உலகக் கிண்ணம் பிரேஸிலுக்கு

லொஸ்ஏஞ்சலஸ் ஜூலை 18

பிரேஸில், இத்தாலி அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், பிரேஸில் வெற்றியீட்டியது.

இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 3.35 மணிக்கு இந்த ஆட்டம் முடிவுற்ற போது இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை.

அதன் பின்னர் பெனால்டி உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

அதில் பிரேஸில் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்

# உயர்திரு நா. காசிவிஸ்வநாதன் அவர்களின் சமூகப்பணிகளை கௌரவித்து முன்னெடுக்கும்

# 60 ஆவது அகவை விழா சிறப்புமலர்

18 - 07 - 94

## தனித்துவம் மிக்க சாதனையாளர்

திருவாளர் நா. காசிவிஸ்வநாதன் முன்நடத்தும் ஒவ்வொரு காரியத்தையும் வெற்றியோடும் பலருக்கு நன்மை தரும் வகையிலும் செய்து முடிக்கின்ற தனித்துவம் பொருந்தியவர்.

அவ்வாறான விழாநாயகனும் விழா எடுக்கின்ற மூத்தவிநாயகர் சனசமூகநிலையமும் சிறப்பாகத் தமது சேவைகளைத் தொடர எல்லாம் வல்ல மூத்த விநாயகர் அருள் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

பிரம்மஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள்,
நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தானம்.

## கர்மவீரன் காசி

இயல்பாகவே கருணையும் நிறைந்த உள்ளமும் படைத்த அருணாசலம் புத்திரன் நாகமுத்து பெற்றெடுத்த காசி காங்கேசன் மண்ணில் தோன்றிய கர்மவீரன் என்பேன். இன்று 60 அகவையைத் தாண்டும் திரு. நா. காசிவிஸ்வநாதன் அவர்கள் நீடுநிறை வாழ்வுபெற்று உய்ய என் நல்வாழ்த்துக்கள்.

கோ. சி. வேலாயுதம்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்-2.

## முழுமனதான சேவையாளன்

திரு. நா. காசிவிஸ்வநாதன் அவர்கள் பல வேறுபட்ட சமூக சேவைகளில் தன்னை இணைத்துக்கொண்ட ஒரு பெருமகன். இவருக்கு மூத்தவிநாயகர் சனசமூக நிலையம் விழா எடுத்துக் கொண்டாடுவதனை இட்டு நான் மகிழ்வு கொள்கின்றேன்.

க. ஜெயரட்ணம்,
அதிபர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி.

## பணி தொடர வாழ்த்து

நான் எப்பணியை தொடங்கும் போதும் இவரின் ஆலோசனையுடன் செய்வது வழக்கம். எனது சகோதரனாகவும், நண்பனாகவும் அமைந்த விழாநாயகன் "குன்றா இளமையுடன் என்றும் பணி தொடர மனமார வாழ்த்துகின்றேன்."

சொ. மன்மதராஜலிங்கம்
தலைவர், மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்,

## வாழ்க்கைப் பாதையில்...



1934-07-18 — நாகமுத்து - சுதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகனாகப் பிறப்பு
1939 — 1945 — காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆரம்பக் கல்வி
1946 — 1951 — புலமைப்பரிசில் பெற்று யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தில் தொடர்கல்வி பெறல்
1952 — 1958 — கொழும்பில் தொழில் முயற்சியை தொடரும் காலங்களிலேயே சமூகப் பணிகளிலும் முன்னின்று உழைத்தமை
1959 — திருமணம்
மனைவி- சீதாலட்சுமி
பிள்ளைகள் -
பத்மலோஷனி
பாஸ்கரன்
கமலாசனி
சுதர்சனி
1960 — 1977 — லிப்டன் ஸ்தாபனத்தில் பணிபுரிந்தமை
1978 — எவர்-றெஸ்ற் தொழில் ஸ்தாபனத்தை உருவாக்கி - அதன் பின்பு நேரடியாக சமூகப் பணிகளில் முழுப்பங்களிப்பை தொடர்ந்தமை
1994-07-18 — 60ஆவது அகவை காணும் நாயகனாக சமூகப் பெரும் தொண்டனாக பிரதிபலிப்பு

மலர் வடிவம்:
கலை - கலாசாரக் குழு
மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்

## சேவையாளனுக்கு வாழ்த்து

சமூகசேவை நிறுவனங்கள் பலவற்றில் அங்கத்தவராக, ஆலோசகராக, தலைவராக, உப தலைவராக, நலன்விரும்பியாக பணியாற்றிவரும் திரு. நா. காசிவிஸ்வநாதனின் பணி மேன்மேலும் தொடரவேண்டுமென எனது சார்பிலும், யாழ். நகர மக்கள் சார்பிலும் வாழ்த்தி ஆசி செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்,

## சமூகப் பணியாளன்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை வலுப்படுத்துவதில் என்னோடு அயராது உழைத்த நண்பன் காசியின் சமூகப் பணிகள் வேறு பல வழிகளிலும் என்னோடு தொடர்புபட்டிருந்தமை குறிப்பிடப்பட வேண்டியது.

விழா நாயகன் தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மேன்மேலும் சேவைகளைத் தொடர மனமார வாழ்த்துகின்றேன்.

கலாநிதி சு. மோகனதாஸ்,
விவசாயபீடம் யாழ். பல்கலைக்கழகம்.

## சமூகத் தொண்டன் காசி

இன்று 60ஆவது அகவைகாணும் சமூகத்தொண்டன் திரு. நா. காசிவிஸ்வநாதன் அவர்களுக்கு அவரது அபிமானிகள் முன்வந்து எடுக்கின்ற விழாகண்டு மகிழ்ச்சியுறும் நண்பர்களில் நானும் ஒருவராக நின்று அவரது எதிர்காலம் சிறக்கவும் மனைவி மக்கள் சகிதம் பல்லாண்டு வாழவும் எல்லாம் வல்ல நல்லூர் கந்தனை பிரார்த்திக்கின்றேன்.

மு. சிறீராமலிங்கம்,
முன்னாள் அதிபர்,
யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

## பெருமிதம் அடைகின்றோம்

சமூகத்துடன் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்ட பெரும் சேவையாளனுக்கு நாம் எடுத்த இவ்விழா, அவர் சார்ந்த அமைப்புத் தொண்டர்கள் - அபிமானிகளினாலேயே பெரிதும் வரவேற்கப்பட்டது.

விழாவின் மேன்மைகண்டு பெருமிதம் அடைகின்றோம்.

து. மனோகரன்
செயலாளர் - விழா ஒழுங்கமைப்புக்குழு,
மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்,

விழா சிறக்க வாழ்த்துபவர்கள்

| | | | |
|---|---|---|---|
| கமலேஸ்வரி களஞ்சியம் கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். | மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ் பெரிய கடை, யாழ்ப்பாணம். | மாருதி புடைவையகம் கிளிநொச்சி. | கரன் புடைவையகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய போட்டோ பிரதி இயந்திரம்-Gestetner Copier 2201 விற்பனைக்குண்டு. அறிவரன், இல. 309, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (வானவில்லுக்கு அருகில்) பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணி வரை பார்வையிடலாம்
(7271)

### ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு சிரசே பிரதானம். ஆகவேசித்தமருத்துவ முறைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்கி பயன் பெறவும். [7486]

### தேவை

தட்டாதெரு, இலுப்பையடிச் சந்தி, ஆனைப்பந்தி, ஆரியகுளம் பகுதிகளில் ஓர் தொழிற்சாலை அமைப்பதற்குத் தெரு ஓரமாக வெறும் காணி அல்லது கட்டடம் தேவை. கடிதமூலம் 25-7-94க்கு முன் தொடர்பு கொள்ளவும். S. V. சிறீஸ்கந்தராசா, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். [7270]

### பொருளியல்

"பணம், வங்கி, விலைச்சுட்டெண்" அண்மைக்கால விடயங்களை (நாணயத்தளம், பணப்பெருக்கி) அடக்கிய நூல் 21-07-94 முதல் பிரபல்ய புத்தகசாலைகளில் கிடைக்கும். ஆக்கம்; வே. கருணாகரன் விலை 15 ரூபா.
(31972)

### வாங்கவும் விற்கவும்

பாவித்த புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், மருத்துவம், சமயம், சாஸ்திரம், பாஸ்பேப்பர், கதை புத்தகங்கள் அனைத்தும் வாங்கவும், விற்கவும் சிறந்த இடம் V R M பழைய புத்தக வாணிபம், 84, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
(7533)

### பெயர்மாற்றம்

ஸ்ரீ லங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இளங்கயல்பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இளங்கயல் பதிப்பகம், பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (31668)

### றோணியோ செய்தல்

100 பிரதிகள் இரண்டு பக்கம் செய்ய 30/- மட்டுமே அறவிடப்படுகின்றது. தரமான முறையில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டு வீதி. (வெலிங்டன் சந்திக்கருகில்) யாழ்ப்பாணம். (ஜி-8638)

### தவறிவிட்டது

கொக்குவிலுக்கும் நாவற்குழிக்கும் இடையில் இல. 251050135 V உடைய தேசிய அடையாள அட்டை 14-7-94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புரையிரத நிலையம் அருகில், 81/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (31963)

15-7-94 அன்று சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் கண்டி வீதியில் நாவற்குழிப் பக்கமாக சிகரட் கத்திக்கோல் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரி முன்பாக உள்ள கௌரி தெ ழிலகத்திலோ அல்லது உஷா கம்பனியிலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31962)

## யாழ்ப்பாண மக்களுக்கோர் குளிர்மையான செய்தி

உங்கள் நலன்கருதி 24 மணி நேரமும்

**பனிக்கட்டி ICE BLOCK**

விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உங்கள் நாளாந்தத் தேவைகளை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

**புறோமோட்டேர்ஸ்**
**என்ஜினியரிங் கம்பனி லிமிட்.**
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
(31974)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம்! 10 - 05 - 1921



விண்ணகம்! 18 - 06 - 1994

**கிறகரி ஜோன்** (சூசைப்பிள்ளை)
(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்)

எங்களின் அன்புத் தெய்வமே! எங்கள் குலத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, வழிகாட்டியாய் வாழ்வை உயர்த்திய தெய்வமே! உமது பூதவுடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எங்கள் வாழ் நாள் முழுதும் உம்மை மறவோம். உமது நித்திய அமைதிக்காக இறைவனின் திருவடிகளை பிரார்த்திக்கின்றோம்;

இன்று காலை 7-30 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குளமங்கால்,
[illegible]

[7530]

இரு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும்

## மாபெரும் வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர்

இலக்கங்களும் பெயர்களும் வருமாறு

1ஆம் பரிசு 8934 சுவர் மணிக்கூடு
மேரி பெனடிற்,
13, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

2ஆம் பரிசு 1996 எவர்சில்வர் பொருள்கள்
நா. த. நடராசா (S. M.),
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

3ஆம் பரிசு 1992 T செட்
நா. த. நடராசா (S. M.),
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

ஆறுதல் பரிசுகள்:

1ஆம் பரிசு 6510 குடை
B சாந்தரூபன்,
300, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

2ஆம் பரிசு 7973 தொப்பி/சாப்பாட்டுப் பெட்டி
மு. நிமலா,
சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை தெற்கு, மானிப்பாய்.

3ஆம் பரிசு 1999 அல்பம்
சி. செந்தூரன்,
வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

4ஆம் பரிசு 7072 பாடசாலைப் பை
N. சபேசன்,
93, பலாலி றோட், திருநெல்வேலி.

5ஆம் பரிசு 7301 பிளாஸ்டிக் வாளி
வே. சுசிவரசு,
ஜும்மா தெரு,
பள்ளிவாசல், யாழ்ப்பாணம்.

6ஆம் பரிசு 529 எவர்சில்வர் பேணிகள்
வ. சிவசுப்பிரமணியம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

7ஆம் பரிசு 530 கைமணிக்கூடு
வ. சிவசுப்பிரமணியம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

இரண்டாவது சீட்டிழுப்பு செப்டம்பர் 15ஆம் திகதி 1994 வியாழக்கிழமை நடைபெறும். இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள். இன்றிலிருந்து 15-08-94இற்கு முன் பரிசில்களை பெற்றுக் கொள்ளவும்.

**ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட்,**
14, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.
[ஜ-8754]

திருநெல்வேலி

## "கலைக் கோவில்"

கீழைத்தேய நடன, நாட்டாரடல், ஆடற்கதை நிறுவகத்தின் வளர்ச்சிப் பணிக்காக
கலைஞர் வேல் ஆனந்தர் ஆடல் அணியினர்
அளிக்கும்

# "முழங்கும் முரசு"

(ஆடற்கதை - S - OPERA)

இடம்: 30 - 07 - 1994 பிற்பகல் 4 மணி
யாழ். இந்து குமாரசாமி மண்டபம்
(16 — 07 — 1994 ஆம் திகதிய நுழைவுச் சீட்டுக்கள் அனுமதிக்கப்படும்)
17 — 07 — 1994 ஆம் திகதிய யாழ். கன்னியர் மடம் ம. வி. நிகழ்ச்சி

இடம்: 31 - 07 - 1994 பி. ப. 6-30 மணிக்கு
யாழ். புனித மரியாள் வித்தியாலய (O L R.) அரங்கில் இடம் பெறும்

சுகாதாரமான, தரமான உணவு வகைகளுக்கு
**'மாருதி' மரக்கறி உணவகம் (விஷ்ணு[illegible])**
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆபத்தான ஆயுதம்!

வாழ்க்கைக்குரிய அடிப்படையான சமூக உளவியல் தேவைகளை இறக்குவதன் மூலம் தமிழர் பிரதேசத்தில் சமூக, கலாசார ஆபத்தை உருவாக்கிவிட ஸ்ரீ லங்கா அரசு முயற்சிக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வொன்றின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இதுவிடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு தனது கல்வி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மூலம் தமிழ் மாணவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து — பாதிப்புகளை ஏற்படுத்தி — அவர்களுக்கு உளவியல் தாக்கங்களை உண்டாக்கி வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் கல்வி அறிவுள்ளவர்களாக விளங்குவதாலேயே அவர்கள் சிங்களவர்களின் அடிமைகளாக இருக்க மறுக்கிறார்கள். எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தும் சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் துணிவுடன் இறங்குவதற்கு மூலாதாரம் கல்வியே. அவர்கள் அறிவில் மேம்பட்டிருப்பதாலேயே அரசியல் முதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அந்த அரசியல் முதிர்ச்சியே அவர்களின் போராட்டத்துக்கும் பக்க பலமாக நிற்கிறது. மொத்தத்தில் அவர்களின் போராட்டத்துக்கு அடித்தளமாக — ஆதார பலமாக — விளங்குவது கல்வியே.

எனவே தமிழ் மக்களின் சகல மேம்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் ஊற்றுக் கண்ணாக இருக்கும் கல்விச் சாலையை அடைத்துவிட வேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா அரசு தீவிரமாக இருந்து வருகிறது.

இன்றைய தமிழ் மாணவர்களை — வருங்கால தமிழ்ச் சந்ததியினரை — கல்வியில் பின்தங்கச் செய்துவிட்டால் அதுவே தமிழர்களின் எதிர்காலத்தையும், அவர்களின் உரிமைப் போராட்டத்தையும் சாகடிக்கப் போதுமானது என்று சிங்கள அரசு கருதுகிறது. தமிழர்களின் சகலவித மேம்பாட்டுக்கும் பலத்துக்கும் மூலவேராக விளங்கும் கல்வியைப் பறித்துவிட்டால், அவர்களை வீழ்த்தி அடிமைகளாக்குவது வெகு சுலபமாகிவிடும் என்றும் அது திட்டமிட்டுள்ளது.

அந்தத் திட்டத்தின் பல்வேறு வடிவங்களே, தமிழ் மாணவர்களின் கல்விக்குப் போடப்படும் வெளிப்படையானதும், மறைமுகமானதுமான அழுத்தங்களும், பாதிப்புகளை உண்டாக்கும் நடவடிக்கைகளுமாகும்.

இராணுவ நடவடிக்கைகளால் மக்களை இடம்பெயரச் செய்வது, பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை முதற்கொண்டு அரசின் ஏனைய அட்டூழியங்கள் யாவும், கட்டுப்பாடுகள், நடவடிக்கைகள் யாவும் எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரின் கல்வி வேரை அறுத்துவிட வேண்டும் என்ற சூழ்ச்சியையும் தம்மகத்தே கொண்டவையாகும்.

அரசாங்கத்தின் இந்தச் சூழ்ச்சி இராணுவத் தீர்வை விட ஆபத்தான ஆயுதமாகும். மிகவும் மோசமான பாதிப்புகளைக் கொண்டு வந்து தமிழர் சமூகத்தை சிரழித்துவிடும்.

எனவே அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல்களை முறியடிக்கும் அதே வேகத்துடனும் பலத்துடனும், இந்தச் சூழ்ச்சியும் முறியடிக்கப்பட வேண்டும்; வெல்லப்பட வேண்டும். உடனடியாகவே இது விடயத்தில் அக்கறை செலுத்தப்படாவிடில் ஸ்ரீலங்கா அரசு தனது சூழ்ச்சியில் வென்றுவிடும். தமிழர்கள் மீளச் சாய்ந்து அடிமைகளாக நேரிடும்.

ஆகையால், தமிழ் மாணவரின் கல்வி பாதிக்கப்படாதிருக்க, அரசின் திட்டங்களுக்கு எதிர்த் திட்டங்களையும், மாற்றுத் திட்டங்களையும் வகுத்துத் தாமதமின்றியும், சிரத்தையுடனும் செயற்படுத்துவது அவசியம். சமூகப் பிரக்ஞை உள்ளவர்கள் இதனைத் தமது கவனத்தில் கொள்ள வேண்டும்.

# திருமலையை சிங்கள மயமாக்க அரசாங்கத்தின் புதிய உத்தி

## அதன் அபிவிருத்திக்கு விசேட அதிகார சபை

கொழும்பு, ஜூலை 18

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்கென விசேட பிரதேச அபிவிருத்தி அதிகார சபை ஒன்றை நிறுவுவது என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

ஜப்பானிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்படும் இவ்விசேட பிரதேச அபிவிருத்தி அதிகாரசபை திருகோணமலை மாவட்டத்தின் அரைவாசியை உள்ளடக்கியதாக இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

திருகோணமலையை சிங்கள மயப்படுத்தும் ஸ்ரீலங்கா அரசின் திட்டத்தில் இது ஒரு முக்கிய நடவடிக்கையாக, புதிய உத்தியாக இருக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

அரசின் தீர்மானத்தை அமுல் நடத்துவதற்காக உயர் திட்டம் ஒன்றை உடனடியாக, அவசரமாகத் தயாரிப்பதென அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

சுதந்திர வர்த்தக நிலையங்கள், உல்லாச, சுகாதார நிலையங்கள், சர்வதேச பாடசாலைகள் வர்த்தக, வீடமைப்பு வளாகங்கள், பூங்காக்கள், மைதானங்கள் ஆகியன இவ்விசேட பிரதேசத்தில் அமைக்கப்படும். மகாவலியில் இருந்து இப்பகுதிக்கு நீர்விநியோகம் வழங்கப்படும்.

ஹிங்குராங்கொடவில் சர்வதேச விமான நிலையம் நிறுவப்படுவதும் ஹிங்குராங்கொடவுக்கும் திருகோணமலைக்கும் இடையே போக்குவரத்து இணைப்பு ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஹிங்குராங்கொடவுக்கும் திருகோணமலைக்கும் இடையே நவீன நெடுஞ்சாலை ஒன்று அமைக்கப்படும். இரு இடங்களுக்கும் இடையேயான தூரம் 40 மைல்களாகும்.

நிலக்கரியினால் இயங்கும் மின் நிலையம் ஒன்று திருமலையில் நிறுவப்படும்.

நீர் விளையாட்டுத்துறை அபிவிருத்தியில் விசேட கவனஞ்செலுத்தப்படும். ஆழ்கடல் மீன்பிடி அபிவிருத்தித் துறையை அபிவிருத்தி செய்யும் திட்டமும் அமுல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## 48 கோடி ரூபா செலவில் திருமலையில் ஆஸ்பத்திரி

### டி. பி. திறந்து வைப்பார்

கொழும்பு, ஜூலை 18

48 கோடி ரூபா செலவில் திருகோணமலையில் கட்டப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரியை எதிர்வரும் 27 ஆம் திகதி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா திறந்து வைக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலி அரசாங்கம் வழங்கிய இலகு கடனான 48 கோடி ரூபாவில் இந்த ஆஸ்பத்திரி புதிய ஆஸ்பத்திரியில் நவீன சத்திரசிகிச்சைத் தொகுதி, தீவிர கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவு, நவீன வார்டுகள் மற்றும் டாக்டர்களுக்கான விடுதிகள் அமைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## வாகனங்களில் கறுப்பு நிற கண்ணாடி பொருத்த தடை

உள்ளே இருப்பவர்களை வெளியே இருந்து பார்க்க முடியாத கறுப்பு நிறக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி. பேகின்பநாயகம் அறிவித்துள்ளார்:

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தப்பிச் செல்வதற்கு இந்த வகையான வாகனங்களை பயன்படுத்துவதையும், போதைப்பொருள் கடத்தல் போன்ற நடவடிக்கைகளையும் தடுப்பதற்காகவே இந்தத் தடையை அமுலுக்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வாகனங்களின் உள்ளே இருப்பவர்களை இனங்காண முடியாதபடி மறைப்புகள் செய்யப்பட்ட வாகனங்கள் பொலிஸாரினால் வீதிகளில் மறித்து நிறுத்தப்படும் என்றும் —

எனவே இது போன்ற மறைப்புகளையும், நிறப்பூச்சுக்களையும் அகற்றிவிட வேண்டும் என்றும் —

வாகன உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளுக்கு அமைய நடக்கத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-4)

## கல்வி நிர்வாக சேவையில் மேலும் 140 வெற்றிடங்கள்

### பதவிகளை அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஜூலை 18

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கீழ்உள்ள 60 பதவிகளை இருநூறாக அதிகரிப்பது என்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்காவின் பணிப்பின் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி இப்பணிப்பை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய தீர்மானத்தினால் கல்வி நிர்வாக சேவையில் அதிக பதவி உயர்வுகள் இடம்பெற வாய்ப்பு உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலை வலைப்பந்து இறுதியாட்டங்கள் இன்று

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு, யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடத்திய வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2.30 மணி முதல் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டிகளில் கப்டன் வானதி நினைவுச் சுற்றுக் கேடயத்துக்கான 17 வயது பிரிவுப் போட்டியில் மெதடிஸ்த மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலய அணியும் —

மேஜர் பாரதி நினைவுச் சுற்றுக் கேடயத்துக்கான 19 வயது பிரிவுப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மெதடிஸ்த மகளிர் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

இன்றைய போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திருநாவுக்கரசு போலும், சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதியும் கலந்துகொள்வர். (ஐ)

### இடம் பெயர்ந்தோர்

## உணவு முத்திரை இன்றியே நிவாரணம் பெறலாம்

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் உணவு முத்திரை இன்றி நிவாரணம் பெறுவதற்கு விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தவர்கள் நிவாரணம் பெறுவதற்கான உணவு முத்திரைகள் மே மாதத்துடன் முடிவடைந்து விட்டன.

கொழும்பு அரச அச்சகத்தில் தேர்தல் தொடர்பான ஆவணங்கள் அச்சிடும் வேலைகள் நடைபெறுவதால் உணவு முத்திரைகள் அச்சிட முடியாதுள்ளதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், யாழ். மாவட்டத்தில் நிவாரணம் பெற்று வருபவர்கள் தமது பழைய முத்திரைகளின் அடிக்கட்டையை ப.நோ.கூ. சங்கங்களில் பதிந்து நிவாரணத்தை பெறலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-3)

தேர்தல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகளை அகற்றுதல், பயமுறுத்தல் போன்ற செயல்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் —

வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலும் அதற்கடுத்த இரண்டு நாட்களிலும் இடம்பெற்றதைப் போன்று வன்செயல்கள் கடந்த நான்கு தினங்களில் இடம் பெறவில்லை என்றும் கூறினார்:

இம்மாதம் 11ஆம் திகதிக்கும் 13 ஆம் திகதிக்கும் இடையே 165 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. நேற்று முன் தினம் எட்டு முறைப்பாடுகளே கிடைத்தன என்றும் அவர் தகவல் வெளியிட்டார். (உ-4)

வால்நட்சத்திரத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் இதனை உறுதி செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, போல்டிமோரில் உள்ள விண்வெளி விஞ்ஞான நிலையத்தில் இப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

இப்படங்களை நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள விஞ்ஞானிகள் தற்போது பகுப்பாய்வு செய்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது:

வியாழனின் வளிமண்டலத்தில் இந்த மோதலினால் ஏற்பட்ட குழப்பம் வியாழக்கிரகத்தின் அமைப்பு மற்றும் இயக்கங்கள் பற்றிய புதிய தகவல்கள், அதன் காலநிலை மாற்றம் காற்று வீசும் முறை ஆகியன குறித்து இப்படங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்று நாஸா விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

வால்வெள்ளியின் துண்டு வியாழக் கிரகத்துடன் மோதிய போது, கஷ்ண வாயுக்கள் கொண்ட தீக்கோளம் ஒன்று ஏற்பட்டதாக, தென் ஆபிரிக்காவில் இருந்து இம்மோதலை அவதானித்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இத் தீக்கோளம் 2 ஆயிரம் கிலோ மீற்றர் அகலமானதாக இருந்ததாக நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்தனர்: இவ் வெடிப்பு 20 நிமிடங்கள் வரை நீடித்ததாக, கேப்டவுனில் இருந்து 870 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சதர்லண்ட் அவதான நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டேவிட் வெனி தெரிவித்தார்.

இந்த நூற்றாண்டிலே மிகப் பெரிய அண்டவெளி மோதல் என வர்ணிக்கப்படும் இந்த சம்பவத்தை உலகம் முழுவதிலும் இருந்து விஞ்ஞானிகள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர்:

சந்திரனின் மனிதன் காலடி வைத்த நிகழ்ச்சியிலும் பார்க்க மிகமுக்கிய விண்வெளி வரலாற்று நிகழ்வாக வியாழன் — வால்வெள்ளி மோதல் அமைந்ததாக விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-எ-ஐ-3)

### வீரச்சாவு

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் மயூரதி (இராசரத்தினம் ஜெயராணி — வேலணை) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஐ)

* * *

கடந்த 9 ஆம் திகதி இருமலையில் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்திய சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

இரண்டாம் லெப்டினன்ட் தொசான் அல்லது இலக்கியன் (சத்தியபிள்ளை புவிராஜ் — ஊறணி குடியேற்றம், பொலிகண்டி), லெப்டினன்ட் மதிவாணன் அல்லது தேவதாஸ் (இராசையா உதயகுமார் 3 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி) ஆகிய இருவருமே வீரச்சாவடைந்தவர்களாவர். (ஐ)

## கடற்கரை மீன்பிடி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 18

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தொழில் முன்னிலைப் பாடங்களில் ஒன்றான கடல் மீன்பிடி பாடத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளது;

யாழ் பிரதேச செயலரின் ஆலோசனைக்கமைய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் இந்தப் பயிற்சி நெறி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் — பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குரிய சகல ஆவணங்களுடனும் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்கு வீதியில் உள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா இம்மாதம் 30ஆம் திகதி நடைபெற உள்ளது. பரிசு நாளை இம் மாதம் 14ஆம் திகதி நடத்த உத்தேசித்திருந்த போதிலும் முன்னேற்பாடாகவே அது 30ஆம் திகதியாக நிர்ணயிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

## நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜூலை 18

தென்மராட்சி கல்விக்கோட்டப் பாடசாலைகளில் கைத்தறிப் பயிற்சியினை ஆரம்பிப்பதற்கென தென்மராட்சிப் பிரதேச செயலர் 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு ஒதுக்கியுள்ளார். (எ-117)

## நீருக்காக அலையும் கால்நடைகள்

அளவெட்டி, ஜூலை 18

குளங்கள் மற்றும் நீரோடைகளில் நீர் வற்றிப் போயிருப்பதால், கால்நடைகள் நீருக்காக அலைந்து திரியும் நிலை அளவெட்டி - கந்தரோடைப் பகுதிகளில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-13)

## தேசிய அடையாள அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 18

கொழும்பில் இருந்து ஆயிரத்து 760 தேசிய அடையாள அட்டைகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் யாழ். செயலகத்துக்கு கொண்டு வரப்பட்டன:

இவை தற்போது யாழ்ப்பாணம் ஆட்பதிவுத் திணைக்கள அலுவலர்களினால் உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டன. (எ-100)

மீனவர் மீது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. உதயன் (வயது 18) என்பவரே காணாமற் போயுள்ளார். வ. குணநாதன் (வயது 28) என்பவர் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய வேளை கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்துள்ளார். காணாமற் போன வள்ளத்தில் மீன்பிடி உபகரணங்களும் இருந்தன.

காணாமற்போன மீனவர் படையினரிடம் பிடிபட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ஐ-15)

### பூகொட ஆடைத் தொழிற்சாலையில்

## 125 அடி உயர தாங்கி மீது ஊழியர்கள் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூலை 18

பூகொட ஆடைதயாரிக்கும் ஆலையில் உள்ள 125 அடி உயரமான தண்ணீர்த் தாங்கி மீது சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஆலையின் ஆறு ஊழியர்கள் மேற்கொண்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தண்ணீர்த் தாங்கியின் கீழே மேலும் பத்து ஊழியர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இந்த ஆலையில் பணி புரிந்து வரும் ஜாதிக சேவா சங்கத்தைச் சேர்ந்த 3 ஆயிரத்து 500 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இந்த ஆலையை நிர்வகித்து வரும் இந்திய நிறுவனம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்தெடுப்பதற்கு முயற்சிப்பதை ஆட்சேபித்தே இந்த உண்ணாவிரதமும் வேலை நிறுத்தமும் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்ணாவிரதமிருந்து வரும் தொழிலாளர்களில் இருவரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

90 ஏக்கர் காணியில் அமைந்துள்ள 200 கோடி ரூபா பெறுமதியான பூகொட ஆலையை ஐ.தே.க. அரசு இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாவுக்கே விற்றதாக தொழிற்சங்கத் தலைவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர். (ஒ-ஈ-6)

## வாக்காளர் அட்டைகள் 2 ஆம் திகதி விநியோகம்

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி ஏககாலத்தில் விநியோகிக்க தபால் திணைக்களம் ஏற்பாடு செய்து வருகின்றது என நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது நேற்று முன்தினம்முடிவுற்றது. தபால் மூலம் வாக்களிப்பது எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறும். (உ-4)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## பரிசாரகர் பதவி உயர்வு 28 சிற்றூழியர் பெற்றனர்

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் பரிசாரகர் பயிற்சி பெற்று இறுதிப்பரீட்சைக்கு தோற்றிய சிற்றூழியர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு தோற்றிய 28 பேரும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இதே வேளை — இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இவர்கள் அனைவரும் பரிசாரகர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இதற்கான கடிதங்களும் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக்கடிதங்கள் பதவி உயர்த்தப்பட்டுள்ள அனைவருக்கும் பணிப்பாளரால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (எ-15)

## வலது குறைந்தவர்களுக்கு சாதனங்கள் வழங்கப்படும்

### சமூக சேவைப்பகுதி நடவடிக்கை

தென்மராட்சி, ஜூலை 18

யாழ். மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்திற்கு 19 முச்சக்கர வண்டிகள், நான்கு தள்ளு கதிரைகள், 25 காது கேட்கும் கருவிகள் மற்றும் 200 மூக்குக் கண்ணாடிகள் ஆகியன வந்துள்ளன.

இவை யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு வழங்க ஒதுக்கப்பட்டுள்ளன:

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது; (எ-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 08 — 01 — 1955



இறப்பு: 18 — 06 — 1994

### அமரர் சச்சிதானந்தம் கனகேஸ்வரி

அம்மா, அம்மா என அழுது புரண்டாலும்
ஆண்டாண்டு காலம் ஆகியே சென்றாலும்
ஆறாது எம் துயர் ஆயினும் ஆண்டவனை —
சரணடைந்தார்
என்று அமைதியாய் இருப்போம்.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட, உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் யாழ்ப்பாண இல்லத்தில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இன்று (18 - 07 - 1994) திங்கட்கிழமை காலை கொழும்பு இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

467, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (31968)

சிந்தை தெளிந்து சீதனத்தை நிராகரிப்போம்
எந்தையர் உள்ளம் இனித்திடச் செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் ஞாபகார்த்தம்



தோற்றம்: 18 — 07 — 1977

மறைவு: 24 — 02 — 1987

### செல்வி ஆரணி ஜெயதாசன்

(தங்கா)

தங்கா வருவாள் தலை புரிவாள்
அன்பைச் சொரிவாள் அருள் புரிவாள்
எங்கும் திரிவாள் எங்கும் தெரிவாள்
எங்களின் ஆரணி இங்கும் வருவாள்;

— அன்புப் பெற்றோர்.

புது வீடு,
கருகம்பனை,
K.K.S

(31945)

---

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் கந்தையா கனகரட்ணம்

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி கன்னாதிட்டி)

மண்ணில்: 23 — 05 — 1941

விண்ணில்: 24 — 07 — 1988

திதி: **18 — 07 — 1994**

நீங்காத நினைவலைகள்
நெஞ்சை முத்தமிட
தூங்காத எம் விழிகள்
தாம் கரைந்து அழுகின்றன
நீங்கள் துயில் கொண்டு
நிறைந்து ஆறாண்டு
நாங்கள் துயில் கொண்டு
நமதுயிர் போகும் வரை
நீங்காது உங்கள் நினைவு
துடித்திருக்கும் எங்கள் இதயம் பேசும்

குடும்பத்தினர்

56, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(31980)

---

## தேவை

### நகைக் கடைக்கு பங்காளர் தேவை

முதலீடு செய்யக் கூடியவராகவும், வியாபாரத்தை சேர்ந்து நடத்தக் கூடியவராகவும் இருத்தல் நன்று. நகைக்கடை யாழ். நகரின் கேந்திர முக்கியத்துவமான இடத்தில் சகல வசதிகளுடன் அமைந்துள்ளது. விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:- 671
உதயன்,
யாழ்ப்பாணம்.

(31981)

---

கொக்குவில் - நந்தாவில் - கற்புலத்து

## மனோன்மணி அம்பாள் ஆலயம்

## பாராட்டு விழா

மேற்படி ஆலயத்தில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இசைச் சேவை புரிந்துவரும்
V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி
சகோதரர்களுடன்
இணைந்து தவில் வாசித்து வரும்

### திரு. பி. கணேசன்

அவர்களுக்கு


இன்று (18-07-1994) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி தேவஸ்தான பரிபாலன சபை சார்பில்
பொற்பதக்கம் அணிவித்து
பொன்னாடை போர்த்திப் பாராட்டி
கௌரவிக்கப்படவுள்ளார்
இவ்விழாவில் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

— ஆலய பரிபாலன சபை.

[31975]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வைத்திலிங்கம் சிங்கவேலு

(மருதனார்மடம், எரிபொருள் நிலைய உரிமையாளர்)

தோற்றம்: 05 — 11 — 1917

மறைவு: 18 — 07 — 1990

திதி: 18 — 07 — 1994

ஆண்டுகள் நான்கு அறியாது போனதப்பா! ஆனாலும் எங்கள் அல்லலோ போகவில்லை. தங்கமாய் எங்களைக் காத்திட்ட எங்களையா கரும்பும் கசக்குதையா கண்ணீர் பெருகுதையா. அன்பைச் சொரிந்து அணைத்திட்ட தந்தையே! அன்பைச் செலுத்த யாருளார் எங்கட்கு கும்பிட்டு கூறுகிறோம். நாங்கள் ஒன்று நூறாண்டு போனாலும் மாறாது எங்களன்பு.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

238, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(31970)

---

## புலிகளின் குரல் வானொலியில்

18 — 07 — 1994
திங்கள் இரவு

- ★ 8-01 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — செய்திச்சரம்
- 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்

19 — 07 — 1994
செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்

## ஆகஸ்ட் 13 இல் பிரசாரம் முடிவு

கொழும்பு, ஜூலை 18

பொதுத் தேர்தல்களுக்கான சகல பிரசாரங்களும் ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைய வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா அறிவுறுத்தியுள்ளார். (உ-3)

## ரீ.வியில் டி. பி. பிரசாரம் செய்யமுடியாது

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ தேர்தலையொட்டி பிரசாரம் செய்யமாட்டார்.

தேர்தலில் ஒரு வேட்பாளராக அவர் இல்லை என்பதால் அவர் பிரசாரம் செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சாரணர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

சாரணர்கள், சாரணியர்கள், பரியோவான் முதலுதவிப் படைப்பிரிவினர் ஆகியோருக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும், மற்றும் இந்தப் பிரிவுகளின் உத்தியோகத்தர்களையும் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆங்கில தின போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட உடுவில் கோட்ட மட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 17 முதல் இடங்களையும் 15 இரண்டாம் இடங்களையும் 5 மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளது.

கரவெட்டிக் கோட்டம் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலதினப் போட்டிகளில் வதிரி திரு இருதயக்கல்லூரி 5 இடங்களைப்பெற்றுள்ளது. செல்வி ஜெ. ஜீவிதா ஆண்டு 4 ஆங்கிலக்கவிதைப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றார். (க)

---

## மரண அறிவித்தல்கள்

### மாரிமுத்து சிவஞானம் (தியாகு)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த மாரிமுத்து சிவஞானம் 17-7-94 இல் காலமானார்.

இவர் சற்குணவதியின் அன்புக் கணவரும், மாரிமுத்து - காலஞ்சென்ற செல்லாச்சி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு - சின்னையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகசபை [கனகு], பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி, தனேஸ்வரி [ஜேர்மனி], கேதீஸ்வரன் [சுவிஸ்], கோடீஸ்வரன் [ஜேர்மனி], யசோதா [சுவிஸ்], ஜெகதீஸ்வரன் [சுவிஸ்], மகேஸ்வரன், நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கருணாகரன் [கொழும்பு], சச்சிதானந்தன், [ஜேர்மனி], செல்வலிங்கம் [சுவிஸ்], கலைச்செல்வி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிகரன், யுவேந்திரன், துஷ்யந்தன், டினுரியா, தர்சிகா, கீர்த்தனா, மயூரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
மா. பாலசுந்தரம் (சகோதரர்)
மாகாண என்ஜினியர்
சாவகச்சேரி

V. C.க்கு முன்பாக
கொக்குவில் கிழக்கு.

(31979)

### சோ. சண்முகலிங்கம்

(உரிமையாளர் அமுதசுரபி திருமுறிகண்டி இனிப்பகம்)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது திருமுறிகண்டி, இனிப்பகத்தில் வசித்து வருமான சோ. சண்முகலிங்கம் 16 - 7 - 94 இல் திருமுறிகண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் முத்தம்மாவின் அன்பு மருமகனும், சோமனாவதியின் அன்புக் கணவரும், திலேஸ்குமார், கோகுலவதனி, கலைச்செல்வி, ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் திருநாவுக்கரசு, காலஞ்சென்றவர்களான தற்பரானந்தன், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணலிங்கம், சண்முகலிங்கம், ஜெயராணி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், சரஸ்வதி, ஞானசௌந்தரி, மகாதேவன், பாக்கியலட்சுமி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, பாக்கியம், கணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருமுறிகண்டி இல்லத்தில் நடைபெற்று, ஈமக்கிரியைகள் திருமுறிகண்டி இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்: சோதி

சஜமுகன் வெற்றிலைக்கடை,
யாழ்ப்பாணம்.

(31983)

### திருமதி நாகசௌபாக்கியம் சிவசம்பு

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகசௌபாக்கியம் சிவசம்பு 16 - 07 - 94 அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தாமோதரம் சிவசம்புவின் (மலேசியன் பென்சனியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, மகேஸ்வரி, நாகரட்ணம், காலஞ்சென்ற ஆனந்தவல்லி, இரத்தினவல்லி ஆகியோரின் அருமைச் சகோதரியும், Dr. திருஞானசிவம் (Retired R. M. P), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி (கனடா), விமலேஸ்வரி, சிவேஸ்வரி, குலசபாநாதன் (Retired T R I) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி நவமணி, குணரட்ணம் (Retired Dept of Census), தியாகராஜா (Retired D S. Postal), நடராஜா Retired Post Master), Dr. கனகராஜா (Retired R. M. P), திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதரன் (Ausltralia), துஷ்யந்திரன் (Papua New Guinea), தமயந்திரன் (U K), டம்மிகா (india), சிவகுணேந்திரன் (Canada), ரவீந்திரன் (Canada), ருபேந்திரன் (Canada), தேனுகா (Ausltralia), ஹரிந்திரன் (U. K), டசிதரன் (Dubai), நிசாந்தரன் (U K), ஷாமினா (Nigeria), ஜமுனா (U. K), டிலோஜனா U. K), டர்சனா (U. S A), டிவாகரன் (U. K), ரொமேசன், டிரான் ஆகியோரின் பாசமிகு பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 07 - 94 சனிக்கிழமை மாலை 4 00 மணிக்கு 64, அம்மன் வீதி, கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
பொ. நடராஜா — சி. கனகராஜா
(மருமக்கள்)

64, அம்மன் கோவில் வீதி,
கொக்குவில்.

[31982]

---


# மிக விரைவில்.......

★ தமிழோசை ★ இது எங்கள் தேசம் ★ தாயகக்கனவு
★ சின்ன விழிகள்

போன்ற வெற்றிப் படைப்புக்களைத் தந்த

பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு

# இன்னும் ஒரு நாடு

(சி-8751)

தயாரிப்பு: முல்லை. மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.